மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 48/24

பெயர் : மதியழகன் (PW1)

த/பெ. : நடராஜன்

(Accused Ambikavathi is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of January 2025

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1)எதிரியும் எனது அம்மாவும் உடன்பிறந்தவர்கள்.எதிரியின் மனைவி யசோதாவும் அசா2 முத்துலெட்சுமியும் உடன்பிறந்தவர்கள்.அசா2 முத்துலெட்சுமிக்கு திருமணம் ஆகவில்லை.அசா2 திருமணம் ஆகாததால் அவருக்கு வேண்டிய உதவிகளை நான் தான் செய்து வந்தேன் என்றால் சரிதான்.எதிரி இந்த சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக அவருக்கு சொந்தமான இடத்தில் உள்ள மரங்களை நான் வெட்டி விற்றுவிட்டதாக நாரைகிணறு காவல்நிலையத்தில் எதிரி என் மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான்.

2)அந்த புகார் மனுவில் நான் விசாரணைக்கு காவல்நிலையத்தில் ஆஜராகி மரம் வெட்டியது உண்மை தான் அதற்கான பணத்தை கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி மரத்திற்கான பணத்தை எதிரியிடம் காவல்நிலையத்தில் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான்.எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான்.மேற்படி மனுவானது நான் நாரைகிணறு காவல்நிலையத்தில் எதிரி என் மீது புகார் மனுவின் விசாரணையின் போது எழுதிக்கொடுத்தது என்றால் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் அதில் உள்ள சங்கதிகளை நான் எழுதவில்லை, ஆனால் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் உண்மை தான்.அதில் மனுவில் உள்ள சங்கதிகளின் படி ரூபாய் 2500 யை காவல்நிலையத்தில் எதிரியிடம் நான் கொடுத்துவிட்டேன்.**(மேற்படி ஆவணம் எசாஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) நாரைகிணறில் இருந்து ஒட்டுடன்பட்டிக்கு இடையே 3 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது.நான் சம்பவத்தின் போது நாரைகிணறில் இருந்ததால் சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் ஓட்டுடன் பட்டிக்கு வந்து அசா2 னினை எவ்வளவு தொலைவு இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன் என்றால் இரு சக்கர வாகனத்தில் அழைத்து செல்லவில்லை 108 ஆம்புலன்சில் தான் அழைத்து சென்றேன்.

4)108 ஆம்புலன்சு ஓட்டுடன்பட்டியில் இருந்து புளியம்பட்டி காவல்நிலையம் வழியாக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றது என்றால் சரிதான்.அவ்வாறு செல்லும் வழியில் காவல்நிலையத்தில் சம்பவத்தை பற்றி சொல்லிவிட்டு தான் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் இல்லை.என்னிடம் காட்டப்படும் அசா1 றினை யார் எழுதியது என்றால் யார் எழுதியது என்று தெரியாது என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றார்கள்.

5)மேற்படி கையொப்பத்தை எங்கு வைத்து செய்தேன் என்றால் மருத்துவமனையில் அசா2 அனுமதிக்கப்பட்டவுடன் புளியம்பட்டி போலிசார் மருத்துவமனைக்கு வந்தார்கள் அப்போது அசா2 பேச முடியாதநிலையில் இருந்ததால் என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டார்கள் எனக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது நான் சென்று பார்த்தபோது அசா2 காயத்துடன் இருந்த விவரத்தை தெரிவித்தேன் அதை எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றதாக நினைவில் உள்ளது சரியாக நியாபகம் இல்லை.

6)மேற்படி நான் சொன்ன விவரம் தான் நான் கையொப்பம் செய்ததில் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான்.அதன்பிறகு போலிசார் என்னிடம் எந்த கையொப்பமும் பெறவில்லை.என் மீது எதிரி கொடுத்த புகாரில் நான் அபாராதம் செலுத்தியிருந்ததால் எதிரி மீது உள்ள விரோதத்தில் நான் அசா2 ஐ ஓட்டுடன்பட்டி சென்று 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.அசா3 தங்கம் எனக்கு போன் செய்து எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7)நான் சொன்ன மாதிரி நான் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.நான் சொன்ன நேரத்தில் நான் சொன்ன விதத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.